# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:
லண்டன்
**சேயோன் - அ.இரவி**
**அகிலன் - மயூரன்**
கனடா
**தயா - மணி**
பாரிஸ்
**சிறி**
ஜேர்மனி
**சபேசன் - சாந்தி**
சுவிஸ்
**சயந்தன்**
பொறுப்பாசிரியர்
**- கோபி -**
மக்கள் தொடர்பு
**பாலா**
விளம்பரம்
**கௌரி - சசி - நிஷா - சுபா**
அச்சு
**குமார் (ஜெர்மனி)**
வடிவமைப்பு
**jasmine studio**
முகப்பு வடிவமைப்பு
**seven zero graphics**
விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - மாயா**
தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**
நிதி – நிர்வாகம்
**முருகானந்தன்**
வழங்கல்
**உதயகுமார்-ராஜு-கரன்**
**உங்கள் தொடர்புகட்கு:**



தொலைபேசி (Tel)
**லண்டன்** 020 7043 4310
**பாரீஸ்** 01 7289 8165
**சுவிஸ்** 043 500 0277

தொலைநகல் **(Fax)**
020 7043 4312

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

**பணிமனை முகவரி**
**Oru Paper**
**45'B' Crusoe Road**
**Mitcham CR4 3L J**
**Surrey**

மின்னஞ்சல்:
**info@orupaper.com**
இணையம்:
**www.orupaper.com**



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# நரம்புகளே பூணூலாக!

**சற்று மறுதலுக்காக**

எழுதுவது: **சேயோன்**

ஞாநி யார்? அவருக்கு ஏன் பதில்? என்ற கேள்விகள் இருக்கின்றன. மேலும் ஒரு கேள்வி உண்டு. இதற்காக நேரத்தையும் மையையும் விரயமாக்கலாமா?

*ஒரு பேப்பர்* வாசகர்களுக்காக ஞாநி என்பவர் பற்றி சிறுகுறிப்பு. 'பரீக்சா' என்ற பெயருடன் தீவிர நாடக இயக்கம். 1980களில் 'தீம் தரிகிட' என்ற மாதாந்த இதழின் ஆசிரியர். தீவிர நாடக இயக்கம் போல தீவிர சினிமாவிலும் ஆர்வம். மேலும் தீவிர ஊடகவியலாளர். 'ஓ பக்கங்கள்' என்ற பத்தியினை முதலில் ஆனந்த விகடனிலும், தற்போது குமுதத்திலும் எழுதி வருகிறார். இவை யாவும் நமக்கும் உவப்பான விடயங்களே.

நமக்கு உவப்பில்லாத விசயம், ஞாநியின் பார்ப்பனியப் புத்தியே. ஞாநி பூணூல் அணியாத வராயினும் சுபவீரபாண்டியன் ஒரு முறை குறிப்பிட்டது போல 'நரம்புகளையே பூணூலாகக்' கொண்டவர். அதன் பொருள் புரியும் என நம்புகின்றேன். உடம்பின் நாடி நாளம் யாவிலும் குருதியாக பார்ப்பனியம் ஓடுகின்றது.

சுப்பிரமணிய சுவாமி கோமாளித்தனமாக வெளிப்படுத்துகின்ற பார்ப்பனிய பிதற்றல்களை ஊடகத்தமிழில் அழகுற வெளிப்படுத்துபவர் தான் இந்த ஞாநி. இதை இவ்வாறும் சொல்லலாம். எப்படியென்றால் ஜெயலலிதா, சோ, இந்துராம், சுப்பிரமணிய சுவாமி போன்ற இன்னோரன்ன பார்ப்பனியப் பேய்கள் தங்கள் தங்கள் துறைகளினூடாக எவ்வாறு செவ்வையாக பார்ப்பனியக் கருத்துக்களை பரப்புகின்றார்களோ அதே போல தன் துறையினூடாக பார்ப்பனியக் கருத்துக்களை கச்சிதமாக பரப்புகின்றார் ஞாநி.

சரி, நாம் சும்மா ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். ஒக்டோபர் 29ம் திகதிய குமுத வார இதழின் 'ஓ பக்கங்'களில் ஞாநி இப்படி எழுதுகின்றார்.

"கலைஞர், ஜெயலலிதா, ராமதாஸ், மன்மோகன், சோனியா, லாலு, மாயாவதி வகையறாக்களை விட பிரபாகரன் பல மடங்கு சிறந்த சுயநலமில்லாத மனிதர் என்பதில் எனக்கு துளியும் சந்தேகம் இல்லை. ஆனால் அவருடைய இராணுவ அரசியல் மக்களுக்கு உதவியதை விட கருணாநிதியின் ஊழல் அரசியல் அதிகம் உதவியிருக்கின்றது என்பதே நிஜம். ஊழல் ஜனநாயக அரசியலில் கருணாநிதி, ஜெயலலிதா ... முதல் என் போன்ற குரல்கள் வரை ஒலிக்க முடியும். நிர்மலா நித்தியானந்தன், செல்வி, பத்மநாபா, பாலகுமாரன், சோபா சக்தி, சேரன் குரல்களுக்கு இடம் கொடுக்கும் பிரபாகரனின் அரசியலைத்தான் என் மனம் அவாவுகின்றது."

'நஞ்சினில் நெஞ்சை வைத்து நாவினில் அன்பு வைத்த' ஞாநியின் எழுத்தில் இரண்டு விடயம் மிக இடறுகின்றது. ஜனநாயகத்தின் மீதான ஞாநியின் அதீத பற்று எதற்கு? ஜனநாயகத்தை விட்டால் பார்ப்பனியத்தைக் காப்பற்ற வேறு நாதி கிடையாது என்பதனால் வந்த பற்றா? இந்த ஜன நாயகத்தால் ஞாநி ஆதரித்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையும் அடிபட்டுப் போயிற்றே. அதற்கு ஞாநி என்ன சொல்வார்? ஓ! இப்பொழுது தான் புரிகின்றது இடஒதுக்கீட்டு கொள்கை என்பது ஞாநியின் உதட்டிலிருந்து மாத்திரம் தான் வந்தது என்று.

ஞாநியின் ஜனநாயகம் தான் ஈராக்கின் இலட்சக்கணக்கான மக்களைக் கொல்ல புஷ்க்கு உதவியது. ஈழத்தின் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொல்ல சிங்கள அரசுக்கு உதவியது என்பது போக தமிழ்நாட்டையே அடிச்சு உலையில் போட ஜெயலலிதாவுக்கு உதவியதும் ஞாநியின் ஜனநாயக அரசியல்தான். தமிழ்நாட்டை கருணாநிதியின் குடும்பமே ஆட்சி செய்ய, அதிகாரம் செய்ய, அடாத்துச் செய்ய, ஞாநியின் ஜனநாயக அரசியல் தான் இடம் கொடுத்தது என்பது பார்ப்பனிய ஞாநிக்கு புரியாதா என்ன?

என்னை இடறிய இரண்டாவது விசயம் இது. ஞாநி சில பெயர்களை அடுக்கி இருக்கின்றார். இவர்களின் குரலையும் ஒலிக்க விடவேண்டுமா? இவர்கள் அனைவரும் ஞாநிக்குத் தெரிந்தவர்கள் அல்லது வேண்டப்பட்டவர்கள் என்பதைத் தவிர இவர்கள் பெயர் வந்தமைக்கு வேறு காரணங்கள் யாதுமில்லை. இன்னும் சில பெயர்களை ஞாநி செருகியிருக்கலாம். அவர்கள் பெயரை சிபாரிசு செய்கின்றேன். டக்கிளஸ், கருணா, பிள்ளையான், சங்கரி, ராஜேஸ் பாலா, ஜெயதேவன்... பட்டியல் இன்னும் இருக்கின்றது.

ஞாநி குறிப்பிட்டோரில் பாலகுமாரனைத் தவிர்த்துக் கொள்ளலாம். அவர் வீரஞ் செறிந்த விடுதலைப் போரைக் கையில் ஏந்தியவாறு தன் குரலைப் பதிவு செய்தபடி வருகின்றார். நமது தேசியத்தலைவரின் அருகே அமர்ந்து இருக்கின்றார். பாலகுமாரனை ஞாநி ஏன் குறிப்பிட்டார் என்று எனக்குப் புரியவில்லை.

செல்வி, பத்மநாபா இருவரும் செத்துப் போய் விட்டனர். அவர்களின் குரல் எழ வாய்ப்பில்லை என்றாலும் ஒன்று சொல்ல வேண்டும். செல்வியை எனக்கு நேரடியாகவே பழக்கம். ஒருவகையில் எனது தோழியும் கூட. இறந்து போனவர்களைப் பற்றிப் பறைவது அவ்வளவு சரியல்ல என்றாலும் இதைச் சொல்கின்றேன். 1990 ஜூன் 11, இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கி விட்டது. அப்போது யாழ் பல்கலைக்கழக வளவில் செல்வியை அடிக்கடி காண்பதுண்டு. பலதும் பத்தும் பற்றிப் பேசுவோம். ஒருமுறை செல்வி சொன்னார் "யாழ்ப்பாணத்தை ஆமி பிடிச்சுட்டால் எங்களுக்கு பிரச்சினை இல்லை" இக்கருத்தைச் சொன்னவர் இக் கருத்துக்காக செயற்பட்டு இருக்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்? போக இப்படியான குரல்களா ஒலிக்க வேண்டும் என ஞாநி விரும்புகின்றார்.

இந்திய ஆக்கிரமிப்பு படைக்காலத்தில் பத்மநாபா தலைமையில் இயங்கிய சமூக விரோதக் குழு தமிழீழத்தில் செய்த அட்டகாசங்களை ஞாநி அறியாதா இருக்கின்றார். அந்த அடாத்தைப் பற்றி எழுத *ஒரு பேப்பர்*ரே போதாது. அத்தகைய சமூக விரோதியின் குரலா ஒலிக்க வேண்டும்.?

யாரிந்த நிர்மலா நித்தியானந்தன், சோபா சக்தி? அவர்கள் என்ன பிடுங்கினார்கள்? ஞாநி ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். மாரித் தவக்கைகள் கத்திக் கத்திச் செத்துப் போவதைப் போல இவர்களும் எங்கேயோ ஒரு மூலைக்குள் இருந்து கத்திக் கொண்டுதான் இருப்பார்கள். புனிதமான எங்கள் தமிழீழத் தேசத்தில் இந்த மாரித் தவக்கைகள் வேண்டாம்.

ஜனநாயகம், தனிமனித சுதந்திரம் என்ற சொற்களைத்தான் ஞாநி போன்ற பார்ப்பனியர் பயன்படுத்துவர். சங்கரி போன்ற சமூக விரோதிகளுக்கும் அந்தச் சொற்கள் உவப்பாக இருக்கும். ஏனென்றால் தமது மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு அவைதானே வழி சமைக்கும். ஞாநி ஒன்றைப் புரிந்து கொள்ளட்டும் மக்கள் விடுதலை பெற போராடுகின்ற எந்த தேசத்திலும் ஞாநியின் ஜனநாயகம் இல்லை. அங்கெல்லாம் மக்கள் நலன் சார்ந்த ஜனநாயகமே உள்ளது. அதுதான் தேவையானதும், சரியானதும்.

# செயலும் செயலில் வெற்றியும்

நாம் பல முயற்சிகளை எடுக்கிறோம். அவற்றில் சில வெற்றி பெறுகின்றன. பல தோல்வியடைகின்றன. நாம் எடுத்த முயற்சியகள் அனைத்தும் தோற்பதில்லை. அதே போல நாம் எடுக்கின்ற அனைத்து முயற்சிகளும் கைகூடுவதுமில்லை.

நாம் எடுத்த முயற்சிகள் யாவும் கைகூட வேண்டுமெனில் அது பயிற்சி எனும் செயலால் பரிணமிக்க வேண்டும்.

செயல் எனப்படுவது நிலைச்செயல், அலைச் செயல், நிலை அலைச் செயல், அலைநிலைச் செயல் என நான்கு வகைப்படும்.

நிலைச் செயல் என்பது குறித்த காலப் பயிற்சியின் நிறைவில் மாறாத நிலைத்த பயனைத் தருவதாகும்.

அலைச் செயலாவது முயன்றும் பயன் எதுவும் இல்லாமல் போவதாகும்.

நிலை அலைச் செயல் என்பது முயன்றும், பயின்றும் கைகூடும் தருணத்தில் கைகூடாமல் போவதாகும்.

அவலநிலைச் செயல் எனப்படுவது கடும் முயற்சியின் நிறைவில் பலன் கைகூடுவதாகும்.

ஒருசிற்பிதெள்ளியசிந்தனையுடன் அற்புதமான ஒரு அழகான சிலையை வடித்து வைப்பது நிலைச் செயல் வகையைச் சார்ந்ததாகும்.

அலைச் செயல் என்பது பெருங்காற்று வீசும் காலத்தில் தெருவில் மாவு விற்கும் செயலை ஒத்ததாகும்.

நிலை அலைச் செயல் எனப்படுவது செழிப்பான நிலமிருந்தும், நீரிருந்தும் போதிய புற ஒத்துழைப்புகள் இல்லாமல் வீணாகும் பயிர் சாகுபடியைப் போன்றதாகும்.

அலைநிலைச் செயலாவது அடர்ந்த வனத்தினுள் புதுவழிப் பாதையை அமைப்பது போன்றதாகும். அதாவது முதலில் செய்வதற்கு சிரமமாகவும் பின்னர் நிலைத்த பயனைத் தரும் வகையில் அமைவதுமாகும்.

ஒரு செயல் முழு வெற்றியினைப் பெற சுய ஆற்றல், சுற்றுச் சூழல், தன்மை, சார்பு ஆகிய நான்கும் ஒருங்கே அமைதல் வேண்டும். இதனை திருவள்ளுவப் பெருந்தகை.

'எண்ணித் துணிக கருமம் – துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு'

என அருளியுள்ளார்.

சுய ஆற்றல் என்பது தன் சுயத்தைப் பற்றி ஆராய்ந்து தன்னிடம் உள்ள நிறைகுறைகளை சீர்தூக்கி அல்லதை விட்டு நல்லதைக் கொண்டு ஆற்றல் களமாக விளங்கி முதலில் தன்மேல் நம்பிக்கை கொண்டு விழிப்புணர்வோடு இருப்பதாகும்.

சுற்றுச் சூழல் என்பது இயற்கை சூழ்நிலைகளை ஆராய்ந்து தெளிந்து அதற்கேற்றாற் போல, அல்லது அதனைத் தமக்குச் சாதகமாக்கியோ, செயல்படுவதாகும்.

தன்மை எனப்படுவது செய்யப்படும் செயல்களின் விளைவுகள், தனக்கும், பிறர்க்கும் நன்மையை மட்டும் தரக் கூடியதாக இருந்தால் எக்காலத்திலும் போற்றத்தக்கதாகவும், உலக மக்கள் பின்பற்றக் கூடியதாகவும் விளங்கி நிலை பெற்று இருக்கும். தீமையை விளைவிக்க கூடியதானால் அதி விரைவில் நிலையற்றதாய் ஒழியும். தீமைகளை விளைவிக்கும் செயல்களைச் செய்தாலும் நன்மைகளைத் தரும் செயல்களைச் செய்யாமல் விட்டாலும் மாபெரும் தவறேயாகும். இதனையே

'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'

என தெய்வ மாமறையும் முழங்குகின்றது.

சார்பு எனப்படுவது தனது மன அலை வரிசைக்கு ஒத்த, தான் செய்யும் செயல்களைப் பற்றிய பட்டறிவு கொண்ட பெரியோர்களின் துணைதேடுதலைக் கொண்டு நடத்தலாகும்.

இந்நான்கையும் தெள்ளெனத் தெளிந்து முறையாகக் கைக் கொண்டு செயல்பட்டால் முழு வெற்றியைப் பெறலாம்.

இதனை வள்ளல் பெருமான் தன் அருட்பெருஞ்சோதி அகவலில்

'துறையிது வழியிது
துணிவிது நீ செயும்
முறையிது எனவே
மொழிந்த மெய்த்து துணையே'

என்று கூறுகிறார்

நீ எதுவாக ஆக நினைக்கின்றாயோ அது வாகவே ஆகின்றாய் என்பது ஆன்றோரின் வாக்கு ஆகும்.

ஆகவே சுய ஆற்றல், சுற்றுச்சூழல், தன்மை, சார்பு என நான்கும் ஒருங்கே பெற்று ஒரு செயலைச் செய்தால் வெற்றி நிச்சயமாகும்.

ஒரு செயல் தோல்வியடைகின்றதென்றால் பெரும்பாலும் மேற்கூறிய ஏதோ ஒரு விடயத்தில் நாம் அசட்டையாக இருந்து விட்டோம் என்பது தான் காரணமாக இருக்கும்.

எனவே தோல்வியைக் கண்டு மனம் தளராதீர்கள். விட்ட தவறைத் திருத்தி மீண்டும் முயற்சி செய்யுங்கள்

மனம் தளராதீர்கள், எல்லை இல்லா மாபெரும் ஆற்றல் உங்களுக்குள்ளே கொட்டிக் கிடக்கிறது. உங்களுக்காகவே காத்துக் கொண்டிருக்கிறது. உண்மையை கண்டு தெளிந்து உறுதியில் நிலைத்தால் வெற்றி உங்களை வந்து அடையும்.

*- என்.கணேசன்*